**ISSN : 2456-821X** ***அவையம்* 3(1) 2019 *ப.எண்.* 1-11**

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# குறிஞ்சித் திணைப்பாடல்களும் குறிஞ்சிப்பாட்டும்

***முனைவர் ஆ. சந்திரன்***

*உதவிப்பேராசிரியர்*

*தமிழ் முதுகலை & ஆய்வுத் துறை*

*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*

*திருப்பத்தூர்.*

***கட்டுரை பெறப்பட்டது : 17.04.2019*** ***ஏற்கப்பட்டது : 14.06.2019***

*வேட்டைக்குச் செல்லும் ஓர் இளைஞனும், தினைப்புனம் காத்து நிற்கும் ஓர் கன்னியும் முதல் சந்திப்பிலே ஒருவர்மேல் ஒருவர் காதல் கொள்கின்றனர்.மலையும் மலைசார்ந்த இடத்தில் இயற்கையாக இணையும் அந்த இரு உள்ளங்களின் காதல் / அன்பு மலர்ந்து மலைமுழுவதும் மணத்தைப் பரப்புகின்றது.இயற்கை வளம் சூழ்ந்த மலைகளில் நிகழும் காதலையும் காதலர்களின் மன உணர்வுகளையும் அழகாய் வெளிப்படுத்துவனவாய் உள்ளன குறிஞ்சித் திணைப் பாடல்கள்.தொல்காப்பியர் குறிப்பிடும் குறிஞ்சித் திணைக்குரிய இலக்கணத்தைக்கொண்ட பாடல்களாக இவை இருப்பினும், அவ்விலக்கணத்திலிருந்து மாறுபடுகின்ற போக்கு அவற்றில் காணப்படவும் செய்கின்றன. மூன்றடியில் தொடங்கி 31 அடிவரைகொண்ட (கலித்தொகை நீங்கலாக) எட்டுத்தொகைப் பாடல்களுக்கும் 261 அடி அளவு வளர்ந்து நிற்கும் குறிஞ்சிப்பாட்டிற்கும் இடையில் ஓர் இடைவெளி உண்டு. அந்த இடைவெளி*

கவித்துவத்தில் ஏற்பட்ட வளர்ச்சியால் உண்டானதாகும்.அவ்வளர்ச்சி எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதை பற்றிய ஆய்வை மேற்கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிஞ்சிப்பாட்டின் பின்புலம்**

குறிஞ்சிப்பாட்டு, தோழி அறத்தொடு நிற்றல் என்ற துறையில் அமைந்த பாடலாகும். அறத்தொடு நிற்றலாவது தலைவன்- தலைவியிடையே தோன்றிய களவொழுக்கம் பிழையாது, மணப்பதனால் கற்பொழுக்கமாக மாற உதவும் வகையில் அக்களவினைத் தலைவி தோழியிடமும், தோழி செவிலியிடமும், செவிலி நற்றாயிடமும், நற்றாய் தந்தையாரிடமும் முறையாக வெளிப்படுத்துவதாகும்.களவு கற்பாக மாற வேண்டியது அறமாதலின், அதனை உரியவரிடம் உரிய நேரத்தில், உரிய வகையில் வெளிப்படுத்தும் செயல் அறத்தொடு நிற்றல் எனப்படும்.தலைவன், தலைவி இருவரும் இயற்கைப் புணர்ச்சியாக முதற்காட்சியில் ஒருவரையொருவர் கண்டு கூடியமுறையை, தூய அன்பொடு பொருந்திய அறத்தின் வழிப்பட்ட செயலே எனத் தோழி செவிலிக்கு எடுத்துரைக்கிறார். இது தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் எனப்படும். செவிலி மனம் கொள்ளத்தக்க அளவில் தலைவனின் செயல்கள், பண்புகள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் முறையானது,

''எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇய
அவ்வெழு வகைய என்மனார்ப் புலவர்'' (தொ.பொ.207)

என அமையும் என்கிறது தொல்காப்பியம்.''அறத்தொடு நிற்றலின் மேற்கூறிய கூறுகள் எல்லாம் ஒரே பாடலில் அமைந்ததாக ஒரு பாடலும் இல்லை. ஆனால் குறிஞ்சிப்பாட்டில் மட்டும் 'உசாதல்' தவிர்த்து அனைத்துக் கூறுகளும் விளக்கமாக அமைந்துள்ளன''[1]

**தோழி அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்த எட்டுத்தொகைப் பாடல்களும் குறிஞ்சிப்பாட்டும்**

'தோழி அறத்தொடு நிற்றல்' என்ற துறையில் அமைந்த பாடல்களில் குறுந்தொகையில் உள்ள 23, 26, 362 ஆகிய பாடல்களையும், ஐங்குறுநூற்றில் உள்ள205, 210, 220 ஆகிய பாடல்களையும், அகநானூற்றில் உள்ள 48 - ஆம் பாடலையும் மாதிரிகளாகக் கொண்டு குறிஞ்சிப்பாட்டின் வளர்ச்சி அமைந்துள்ள முறையை இனி ஆராய்வோம்.

எட்டுத்தொகையில் 'தோழி அறத்தொடு நிற்றல்' என்ற துறையில் அமைந்த பாடல்களில் நீண்ட பாடல் அகநானூற்றிலுள்ள 48- ஆம் பாடலாகும்.மற்ற பாடல்கள் குறைந்த வரிகளைக்

கொண்டவைகளாகும்.அத்துடன், அகநானூற்று 48- ஆம் பாடல் பத்துப்பாட்டிலுள்ள குறிஞ்சிப்பாட்டினைப் போன்றே அமைந்துள்ளதும் இங்குக் கவனிக்கத்தக்கதாகும்.

அன்னாய்! வாழி! வேண்டு, அன்னை! நின் மகள்,
'பாலும் உண்ணாள், பழங்கண் கொண்டு,
நனி பசந்தனள்' என வினவுதி அதன் திறம்
யானும் தெற்றென உணரேன் மேல் நாள்,
மலி பூஞ்சாரல், என் தோழிமாரோடு
ஒலி சினை வேங்கை கொய்குவம் சென்றுழி,
'புலி புலி!' என்னும் பூசல் தோன்ற
ஒண் செங்கழுநீர்க் கண் போல் ஆய் இதழ்
ஊசி போகிய சூழ் செய் மாலையன்,
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்,
குயம் மண்டு ஆகம் செஞ் சாந்து நீவி,
வரிபுனை வில்லன், ஒருகணை தெரிந்துகொண்டு,
'யாதோ, மற்று அம் மா திறம் படர்?' என
வினவி நிற்றந்தோனே அவற் கண்டு,
எம்முள் எம்முள் மெய்ம் மறைபு ஒடுங்கி,
நாணி நின்றனெமாக, பேணி,
'ஐவகை வகுத்த கூந்தல் ஆய் நுதல்
மை ஈர் ஓதி மடவீர்! நும் வாய்ப்
பொய்யும் உளவோ?' என்றனன் பையெனப்
பரி முடுகு தவிர்த்த தேரன், எதிர்மறுத்து,
நின் மகள் உண்கண் பல் மாண் நோக்கிச்
சென்றோன் மன்ற, அக் குன்று கிழவோனே
பகல் மாய் அந்திப் படுசுடர் அமையத்து,
அவன் மறை தேஎம் நோக்கி, 'மற்று இவன்
மகனே தோழி!' என்றனள்
அதன் அளவு உண்டு கோள், மதிவல்லோர்க்கே. ''(அகம். 48)

இப்பாடலைப் பகுக்க இதில்,

1. தோழி செவிலியை விளித்தல்
2. தலைவியின் வருத்தமும்- தோழியின் நிலைபாடும்
3. பூப்பறிக்கச் செல்லல்

4. தலைவனின் வடிவ வருணனை

5. தலைவனின் செயல்பாடுகள்

6. தலைவன்- தலைவியின் காதல்

7. மாலை நேர வருணனை

8. தலைவியின் மன வருத்தம்

என்ற எட்டு பொருட்கூறுகள்[2] இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.தனித்தனியாக எட்டுத்தெகையிலுள்ள பிற பாடல்களைப் பகுக்க மேற்கண்ட கூறுகளில் இரண்டு அல்லது மூன்றுகூறுகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.எனவே எட்டுத்தொகைப் பாடல்களின் மொத்த பொருட் கூறுகளாய் இவற்றைக் கணக்கில் கொண்டு இப்பொருட் கூறுகளைக் குறிஞ்சிப்பாட்டுடன் ஒப்பிட்டு ஆராய்வோம்.

**தோழி செவிலியை விளித்தல்**

குறிஞ்சிப்பாட்டு மற்றும் அகநானூற்று 48- ஆம் பாடலின் தொடக்கமும் தோழி செவிலியை விளிப்பதாகவே அமைந்துள்ளன.இவ்வாறு விளித்தல் அகநானூற்று 48- ஆம் பாடலில், "அன்னையே வாழ்வாயாக! யான் கூறுவதனை விரும்பி கேட்பாயாக! நின்மகள் பாலையும் பருகாள். துன்பமுற்று மேனியும் மிகவும் பசந்துள்ளாள் என வினவுகின்றாய்! (அகம் 48.1-3)" என்று சுருக்கமாக அமைந்துள்ளது.

ஆனால் இது குறிஞ்சிப்பாட்டில்,"அன்னையே நீ வாழ்க! யான் கூறுவதனை விரும்பி கேள்! ஒளிபொருந்திய நெற்றியினையும் தழைத்து வளர்ந்துள்ள மெல்லிய தலைமயிரினையும் உடைய என் தோழியின் உடலின்கண் அணிந்துள்ள ஆடை அணிகள் வேறொன்றிற்கில்லாத சிறப்பினையுடையன. அவை அவள் உடலினின்றும் நெகிழ்தற்குக் காரணமான மெலிவை உண்டாக்கிய மருந்துகளால் தீர்க்க முடியாத நோயைத் தீர்த்தல் பொருட்டு நீ அகன்ற ஊரின் கண்ணுள்ள நோயைக் குறியால் உணரும் கட்டுவித்தி, வேலன் முதலிய அறிவோரை வினவி மகள் உற்ற நோய்க்குக் காரணம் யாதென கேட்டாய் (குறி.1-8)" என்றுவிரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதுவே ஐங்குறுநூற்றில்

"அன்னாய் வாழி வேண்டு அன்னை.... " (ஐங்கு.205:1)

"அன்னாய் வாழி வேண்டு அன்னை.... " (ஐங்கு.210:1)

என்று மிகச் சுருக்கமாவும், அகநானூற்றில் சற்று விரிவாவும் குறிஞ்சிப்பாட்டில் அன்னையை விளிப்பது என்பது இவற்றைவிட விரிவாகக் கூறப்பட்டுள்ளதுடன் தலைவியின் நோய்க்கான காரணத்தை அறிய அறிவுடையாரை அவள் வினவுகின்றாள் என்றும் கூறப்பட்டுள்ளது.

**தலைவியின் வருத்தமும் - தோழியின் நிலைபாடும்**

தலைவியின் வருத்தமும், தலைவியின் அந்நிலையினைப் பற்றிச் செவிலித்தாயிடம் கூறும் தோழியின் நிலைபாடும் பற்றி இவ்விரு பாடல்களிலும் கூறப்பட்டுள்ளன. அகநானூற்று 48- ஆம் பாடலில், "அதற்குரிய காரணத்தை யானும் தெளிவாக அறியேன்"(அகம்-48.3,4)என்று தோழியின் நிலைபாடு சுருக்கமாய் கூறப்பட்டுள்ளது. அத்துடன், தலைவியின் மேனி பசந்து துன்பமுற்றுள்ளதற்கான காரணத்தை அறியாதவளாகத் தோழி சித்தரிக்கப்பட்டுள்ளாள். ஆனால், குறிஞ்சிப்பாட்டில், "முத்தாலும், மணியாலும், பொன்னாலும் செய்த அருங்கலங்கள் கெடின் அத்தொழில் வல்லுநர் திருத்தி அமைக்க மீண்டும் அது பொருந்தும். அதுவன்றிக் குணங்களின் அமைதியும், மேம்பாடும் ஒழுக்கமும் கெட்டால் அம்மாசு போகும்படி கழுவி முன்போலப் புகழை நிறுத்துதல் குற்றமற்ற அறிவுடைய முனிவர்க்கும் எளிதன்று, எனத் தொண்மையான நூல்களை அறிந்த அறிஞர்கள் கூறுவர். எம் பெற்றோர் வேறொருவருக்கு என்னை மணமுடிக்க இருக்க என் பெண்மை பண்பும் காதலும் ஒருசேரக் கெட நெடிய தேரையுடைய என்தந்தையின் கடத்தற்கரிய காவலைக் கடந்துசென்று யாமும் தலைவனும் தேர்ந்து கொண்ட களவு மணம் இதுவாகும். இதை யாமே சென்று தாய்க்குக் கூறி அறிவுறுத்துவோம்.அங்ஙனம் சொல்வதால் புகழே உண்டாம்.அன்றிப் பழியுண்டாவதற்கு இடம் உளதோ?யாம் அறிவுறுத்திய பின்னர் தாயும் பிறரும் வாரார் ஆயின் எம் உயிர் போகும் வரை பொருத்திருப்போம். (குறி.பா.13-24)" என்று தலைவியின் துயர நிலையைச் செவிலித்தாயிடம் கூறுவதாக அமைந்துள்ளதுடன், "ஒருவரோடு ஒருவர் மாறுபட்டுப் போருக்குச் செல்லும் இரண்டு பெரிய அரசர்களைச் சந்து செய்விக்கும் தொழிலில் நின்ற சான்றோர் போல யானும் நினக்கும் இவளது வருத்தத்திற்கும் அஞ்சும் பெரிய அச்சத்தாலே வருந்தினேன் (குறி.பா.27-34)" என்று தோழியின் நிலை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

அதாவது, குறிஞ்சிப்பாட்டில் வரும் தோழி, தலைவியின் துன்பத்திற்கான காரணத்தை அறிந்தவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். அத்துடன், "இந்தத் தோழி பிற்கால கோவை மரபில் வரும் சாதூரியக்காரியாகத் தோன்றுகிறாளே அல்லாது சங்கப்பாடல்களில் வரும் தலைவி பற்றிய ஆதங்கம் மிக்க 'உடனுறை ஒருவளாக' காணப்படவில்லை. குறிஞ்சிப்பாட்டின் இந்தத் தன்மை இங்குக் குறிஞ்சியினுள்ளே வேர்விட்டு நிற்க வில்லை"[3].அதாவது, எட்டுத்தொகைப் பாடல்களில் கூறப்படும்தோழி என்பவள் தலைவியின் உடன் இருப்பவள்.அவள் தலைவியின்

*இன்ப துன்பங்களில் உற்றத்துணையாக இருப்பவள்.ஆனால் குறிஞ்சிப்பாட்டு கூறும் தோழி முற்றிலும் மாறுபட்டவளாகத் தோன்றுகிறாள்.*

**பூப்பறிக்கச் செல்லுதல்**

*"………………………………….மேல் நாள்,*
*மலி பூஞ்சாரல், என் தோழிமாரோடு*
*ஒலி சினை வேங்கை கொய்குவம் சென்றுழி"(அகம். 48:4-6)*

*என்று அகநானூற்றுப் பாடல் தோழி முதலியோர்ப் பூப்பறிக்கச் சென்றதாகக் கூறுகின்றது. ஆனால் குறிஞ்சிப்பாட்டில்,*

*"நெற்கொள் நெடுவெதிர்க்கு அளந்த யானை*
*முத்து ஆர் மருப்பின் இறங்குகை கடுப்ப*
*துய்த்தலை வாங்கிய புனிறு தீர் பெருங் குரல்*
*நல் கோள் சிறு தினைப் படு புள் ஓப்பி*
*எல்பட வருதியர் என நீ விடுத்தலின்" (குறி.பா.35 - 39)*

*எனத் தினைப்புனம் காக்கச் சென்றதாகக் கூறுகின்றது. அவ்வாறு பூப்பறிக்கச் சென்றபோது அங்குப் புலி! புலி! என்ற சத்தம் வந்தது. அதன் பிறகு அங்கு ஒரு தலைவன் வந்தான்என அடுத்தடுத்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் கூறுகின்றது.*

*ஆனால் குறிஞ்சிப்பாட்டில் தினைப்புனம் காக்கச்சென்றமை (குறி.பா.40 - 45), தலைவி தோழிகளுடன் சுனையில் நீராடல் (குறி.பா.46 - 61), பூப்பறித்து விளையாடுதல் (குறி.பா.61-98), அசோக மர நிழலில் ஓய்வெடுத்தல் (குறி.பா.99 - 106) என் விரியும் அடுத்தடுத்த காட்சிகளுக்குப் பிறகு தலைவன் வருவதாகத்தொடர்கிறது. இத்தகைய விரிவான வருணிப்புமுறை பத்துப்பாட்டில் உள்ள பிற பாடல்களிலும் இவ்வாறே (ஒரே விதமாய்) உள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவை எட்டுத்தொகைப் பாடல்களில் இல்லாத ஒன்றாகும்.*

**தலைவனின் வடிவ வருணனை**

*"அவன் மகளிர் கண்களைப் போன்ற ஒளிபொருந்திய அழகிய செங்கழுநீர்பூக்களை ஊசியாற் கோத்துச் சுற்றிக் கட்டின மாலையை அணிந்திருந்தான்.வெட்சிப் பூவாலான கண்ணியைத் தலையின் ஒரு பக்கத்தே சூடியிருந்தான்.மகளிர் முலைகளை அழுந்துவதற்குரிய மார்பில் சிவந்த சந்தனத்தைப் பூசியிருந்தான்.விரிந்து கட்டிய வில்லை உடையவனாய் ஒப்பற்ற அம்பினை ஆய்ந்து கைக்கொண்டிருந்தான் (அகம்.48-14)" என்று தலைவனின் வடிவழகைப் பற்றி வருணிக்கின்றது அகநானூற்றுப் பாடல். குறிஞ்சிப்பாட்டும் தலைவனின் வடிவழகை,*

*"எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்*
*.. .. .. .. .. .. .. .. .. …………………………*

*துயல் வருந்தோறும் திருந்து அடிக்கலாவ"(குறி.பா.107-127)*

*என்று தலை முதல் கால்வரை கேசாதி பாதமாக விரிவாக வருணித்துள்ளது.அதாவது, இவ்விரு பாடல்களிலும் தலைவனின் வடிவழகு வருணிக்கப்பட்டிருப்பினும் குறிஞ்சிப்பாட்டில் அவ்வருணனை நீண்டு அமைந்துள்ளது.*

***தலைவனின் செயல்பாடுகள்***

*அகநானூற்று 48-ஆம் பாடலில், "ஐவகையாக வகுத்த கரிய நெய்யுண்ட கூந்தலினையும், அழகிய நெற்றியினையும் உடைய மடவீர்!நும் வாயில் பொய்ச் சொற்களும் பிறக்குமோ?என்று வினவினான்.பின்னர் மலை நாட்டுக்குரியவனாகிய அவன் குதிரைகளின் வேகத்தை அடக்கித் தேரினை மெதுவாகச் செலுத்தினான். வந்த வழியே சென்றவன் நின் மகளது மையுண்ட கண்களையே எதிர்மறுத்துப் பலமுறை நோக்கிச் சென்றான் (அகம்.48:17-22)" என்று தோழி, தலைவியைத் தலைவன் குதிரையில் இருந்தவாறே உற்று நோக்கிச் சென்றதாகக் கூறுகின்றாள்.*

*ஆனால், குறிஞ்சிப்பாடடில் தலைவனின் செயல்பாடுகள் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.அதன் விவரம் வருமாறு. தலைவன் தலைவியின் ஐந்துவகையான ஒப்பனைகளைப் பாராட்டுதல் (133-142), அவன் தன்னிடமிருந்து தப்பி ஓடிய ஒன்று உள்ளதென்றும், அது சென்ற திசையைப் பற்றிக் கூறுமாறு தலைவியை வினவுதல் (142-152), அப்போது தினைப் புனத்தைக் காவல் காத்த வேடர்கள் விரட்டிய யானை ஒன்று மிக்க சினத்துடன் தலைவியை நோக்கி வரல் (153-161), அந்த யானையைக் கண்டு தலைவி, தோழி முதலியோர் நடுங்கி தலைவனை நோக்கி செல்லல் (162-169), அந்த யானையைத் தலைவன் அம்பெய்து அதனைப் புற முதுகிட்டு ஓடுமாறு விரட்டுதல் (169-174) எனத் தலைவனின் வருகையிலிருந்து அவன் தலைவியுடன் உரையாடுதல் வரைஅடுத்தடுத்த காட்சிகளாக நீள்கின்றன. இவை எட்டுத்தொகைப் பாடல்களில் இல்லாதவை.*

***தலைவன் - தலைவியின் காதல் காட்சி***

*இவ்விரு பாடல்களும் தலைவன் தலைவி கொண்ட காதலைப் பற்றிக் கூறுகின்றன.இதில் எட்டுத்தொகைப் பாடல்களில் தலைவன் தலைவியின்மேல் கொண்ட காதலானது 'குறிப்புப் பொருள்' கொண்டே விளக்கப்பட்டுள்ளன.அதாவது, தலைவியின் வேறுபாடு கண்ட தாய் முதலியோர் அவளுடைய வேறுபாடு எதனால் உண்டாயிற்று என்று ஆராயத் தொடங்குகின்றனர்.நெல்லை வைத்து குறி பார்க்கின்றனர்.கட்டுவித்தியை அழைத்து வந்து கட்டுப் பார்க்கின்றனர்.அக்கட்டுவித்தி ஒவ்வொரு மலையாக வருணித்துப் பாடுகின்றாள்.தலைவனது குன்றத்தைப் பாடுகின்றாள். அதைப் பாடி முடித்த உடனே வேறொன்றினைத் தொடங்கும் போது தோழி இடைமறித்து,*

*“அகவன் மகளே அகவன் மகளே*

*மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்*

*அகவன் மகளே பாடுக பாட்டே*

*இன்னும் பாடுக பாட்டேயவர்*

*நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே” (குறு.48)*

*என அமையும்.அந்தப் பாட்டினைப் பாட தலைவி மகிழ்ச்சி அடைகிறாள்.தாய் முதலியோர் அதற்கான காரணம் வினவ, அம்மலை நாடனே தலைவியின் மனவருத்தத்திற்குக் காரணம் எனக் கூறி, தோழி அறத்தொடு நிற்பாள். அவ்வாறே குறுந்தொகையில்,*

*1. “கடுவனும் அறியும் அக்கொடி யோனையே” (குறு.26:8)*

*2. “விண்தோய் மாமலைச் சிலம்பின்*

*ஒண்தார் அகலமும் உண்ணுமே பலியோ”(குறு.362:6-7)*

*என்று தோழி அறத்தொடு நிற்பதாகக் கூறப்பட்டுள்ளன.*

*ஐங்குறுநூற்றிலும்,*

*1. “மென் தோள் பசப்பது எவன்கொல் அன்னாய்” (ஐங்.28:4)*

*2. “திதலை அல்குல் நின்மகள்*

*பசலை கொள்வ தெவன் கொல் அன்னாய்” (ஐங்.29:4-5)*

*3. “பெருங்கவின் இழப்ப தெவன் கொல் அன்னாய்” (ஐங்.30:4)*

*4. “ஒலிவெள் ளருவி ஓங்கு மலைநாடன்*

*மலர்ந்த மார்பிற் பாயல்*

*தவநனி வெய்யள் நோகோயானே” (ஐங்.205:3-5)*

*5. “பூங்கெழு குன்றம் நோக்கி நின்று*

*மணிபுரை வழங்கு இழை நிலைபெறத்*

*தணிதற்கும் உரித்தவள் உற்ற நோயே” (ஐங்.210:3-5)*

*என்று தலைவன், தலைவியின் காதலைக் ‘குறிப்புப் பொருளாலே’ தோழி செவிலியிடம் கூறுவதாக அமைந்துள்ளன. குறிஞ்சிப்பாட்டின் தன்மையை ஒத்த அகநானூற்று 48- ஆம் பாடலிலும்,*

*“அவன் மறை தேஎம் நோக்கி மற்று இவன்*

*மகனே தோழி என்றனள்*

*அதன் அளவு உண்டு கோள் மதிவல்லோர்க்கே” (அகம்.48:24-26)*

*என்று 'குறிப்புப் பொருளாலே' கூறப்பட்டுள்ளது. இதில் கூறப்படும் "இவன் மகனே தோழி" என்பதிலுள்ள 'மகனே' என்ற சொல்லுக்கு "ஆடவருள் சிறந்தான்" என்று பொருள் கூறும் நச்சினார்க்கினியர் இதற்கு "இவன் என் கணவனும் ஆவான்" என்று பொருளுரைப்பாரும் உளர் என்கிறார்.*

*"அதன் அளவு உண்டு கோள் மதிவல்லார்க்கே, மற்று இவன் மகனே தோழி" என்று தலைவியின் கூற்றால், தலைவன்பால் அவள் கொண்டுள்ள காதலைப் பற்றிக் குறிப்பால் உணர்த்தும் தோழி, தலைவன், தலைவியின்மேல் கொண்டுள்ள காதலையும்,*

*".. .. .. .. .. ..எதிர் மறுத்து*
*நின்மகள் உண்கண் பல்மான் நோக்கிச்*
*சென்றோன் மன்ற அக்குன்று கிழவோனே" (அகம்.48:20-22)*

*என்று 'குறிப்பாலே' உணர்த்தியுள்ளாள்.இவ்வாறு எட்டுத்தொகையிலுள்ள பாடல்கள் தலைவன், தலைவியின் காதலைக் 'குறிப்பால்' மட்டுமே உணர்த்துவதாக அமைந்துள்ளது.ஆனால், குறிஞ்சிப்பாட்டு அவர்களின் காதல் எவ்வாறு அரும்பி மலர்ந்தது என்பதைக் காட்சிப்படுத்துகிறது.அது பின்வருமாறு அமைந்துள்ளது.*

*"தலைவன் யானையைத் துரத்திய பின் தலைவியிடம் நெருங்கிச் சென்று அழகிய கூந்தலை உடையாய்!தடுமாற்றம் கொள்ளாதே. என் சொல்லினை மனதில் கொள்க என்று கூறி, குற்றமற்ற ஒளி பொருந்திய தலைவியின் நெற்றியைத் துடைத்து நீண்ட நேரம் சிந்தனை செய்து என் முகத்தை நோக்கி புன்முறுவல் செய்தான். அந்நிலையில் தலைவனால் தண்ணளி செய்யப்பட்டவுடன் தலைவியின் இயற்கையான நாணமும் அச்சமும் அவளை ஆட்கொண்டன.அதையறிந்து விரைந்து அவன் முயக்கினின்றும் அகல முயன்றாள். ஆனால் அவன் அவளை அகலவிடானாய்க் கையால் அணைத்து இவள் மார்பு தன் மார்பிலே ஒடுங்குமாறு தழுவினான் என்று தலைவன், தலைவியின் காதலைப் பற்றி 'வெளிப்படையாக' கூறுவதுடன், அக்காதல் நிகழ்ந்த இடத்தைச் சுற்றியிருந்த இயற்கையின் அழகையும் (186-199), அவ்வழகிய சோலையில் தலைவன் தலைவி பகல் பொழுதினை இன்பமாகக் கழித்த முறையையும் (200-214)" பற்றி விரிவாக வருணிக்கப்பட்டுள்ளது. இத்தகைய வருணனை எட்டுத்தொகையில் உள்ள பாடல்களில் இல்லை.*

***மாலை நேர வருணனை***

*மாலைக் கால வருகையைப் பற்றி அகநானூற்று 48 - ஆம் பாடலில்,"பகல் மாய் அந்திப் படுசுடர் அமையத்து" (அகம்.48.22) என்று ஒரே வரியில் கூறப்பட்டுள்ளது. ஆனால்*

*குறிஞ்சிப்பாட்டு, "பகல் கதிர்களை உடைய ஞாயிறு தான் ஊர்ந்து செல்லும் ஏழுகுதிரைகள் பூட்டிய தேரோடு தன் ஒளி மறையும்படி மேற்கு மலையில் மறைய மான் கூட்டங்கள் மரத்தடியில் வந்து கூட, பசுவினுடைய கூட்டம் தம் கன்றுகளை அழைக்கும் குரல் எழுப்பி ஊர்மன்றங்களில் புகுந்தன.. .. பறவையினங்கள் பலவாறு ஓசை எழுப்பி ஆரவாரம் செய்தன. பகைவர் மீது மிகச் சினந்து போர்மேற் செல்லும் வேந்தனைப் போல் அந்தி மாலை விரைந்து வந்தது" (குறி.215-230) என்று மாலை நேரத்தில் நடந்த நிகழ்வுகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. அத்துடன், இம்மாலை நேர வருணனை குறிஞ்சி நிலத்தின் பின்புலத்தை வருணிக்காமல் முல்லை நிலத்தின் பின்புலத்தை வருணிக்கின்றது. "குறிஞ்சிப்பாட்டின் இந்தக் கவிதையியல் நிலைபாடு சங்கப் பாடல்களின் பொதுவான நோக்க முறையிலிருந்து (point of view) மாறுபட்டதாக - உண்மையில் அதிலிருந்து விடுபடுவதாக- அமைவதைக் காணலாம்"[4]*

**தலைவியின் மனவருத்தம்.**

*தலைவனுடன் காதல் கொண்ட தலைவியைத் தலைவன் ஊர் எல்லைவரை கொண்டுவந்து விட்டுச் செல்கிறான்.அதன் பின்னர் இரவுக்குறி, பகல்குறியில் தலைவன் தலைவியின் சந்திப்பு நிகழ்கிறது. அவ்வாறு தலைவியைச் சந்தித்து வரும் தலைவன் எதிர் கொள்ளும் இன்னல்கள் பற்றியும், அதனை அறிந்து தலைவி மனவருத்தம் அடைவதைப் பற்றியும் குறிஞ்சிப்பாட்டு (237-261) விரிவாக வருணிக்கிறது. இத்தகைய வருணனை எட்டுத்தொகையில் உள்ள 'தோழி அறத்தொடு நிற்றல்' என்ற துறையில் உள்ள பாடல்களில் இல்லை.ஆனால் பிற துறையிலுள்ள தலைவிக் கூற்று மற்றும் தோழிக் கூற்றுப் பாடல்களில் இத்தகைய வருணனைகள் இடம்பெற்றுள்ளன.சான்றாக பின்வரும் பாடலைக் கூறலாம்.*

*"நள்ளிரவில் மேகம் இருளைக் கிழிப்பது போல் மின்னித் துளியைத் தன்னிடத்தே கொண்ட மிக்க மழையைப் பொழிந்தது.சிதைந்த வாயினையுடைய புற்றில் மின்மினிப் பூச்சிகள் மொய்த்திருந்தன. இரும்பினைக் காய்ச்சி அடிக்கும்போது சிதரும் தீப் பொறிகள் போன்று அம்மின்மினிகள் நாற்புறமும் ஒளிவிட்டு பறக்குமாறு புற்றினைப் பெயர்த்து உள்ளிருக்கும் புற்றாஞ் சோற்றினைத் தோண்டி எடுக்கும் பெரிய கையினையுடைய ஆண் கரடி இரும்புவேலை செய்யும் கொல்லன் போல் அவ்விடத்துத் தோற்றம் அளிக்கும். வரும் வழியிலுள்ள கான் ஆறோ ஓடக் கோலும் மறையும் வண்ணம் வெள்ளம் பெருக்கெடுத்துக் கல்லில் மோதி ஒலிக்க நினைத்துப் பார்ப்போரையும் நடுங்கச் செய்யும் அச்சத்தைத் தரும் முதலைகளைக் கொண்டது. அவர் வரும் காட்டு வழியோ குறுகலானது.கடக்க விரும்புவோர் அஞ்சும் கற்செறிவையும், வாள் முனையில் நடப்பதைப் போன்று துன்பம் தரும் கூராங் கற்களையும் உடையது. முகில் சுமந்து அசைந்தாடும் மூங்கில்கள் ஒலிக்கும் தெய்வங்களையுடைய பக்க மலையில் கருவுற்றிருக்கும் பெண் புலியின் வேட்கை மிகுந்த*

பசியினைப் போக்கும் பொருட்டுச் சினம் மிக்க ஆண்புலி பெரிய ஆண் பன்றியினைக் கொன்று அச்சம் தரும் நல்ல பாம்பு மேய்வதற்குச் செல்ல ஒளிவேண்டி உமிழ்ந்து வைத்த மணியாகிய விளக்கொளியில் புலால் நாறும்படியாக இழுத்துச் செல்லும் (அகம்.72:1-21)" என்று தலைவன் வரும் வழியின் தன்மை பற்றிக் கூறுகிறது அகநானூற்றுப் பாடல்.

**குறிஞ்சிப்பாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி**

இதுவரைக் கண்ட விளக்கங்களிலிருந்து பார்க்க பெருங்குறிஞ்சி என்று அழைக்கப்படும் பத்துப்பாட்டிலுள்ள குறிஞ்சிப்பாட்டானது பெயருக்கு ஏற்ப (எட்டுத் தொகைப் பாடல்களிலுள்ள) குறிஞ்சித் திணையிலுள்ள செய்திகளைத் தொகுத்துக் கூறுவதுபோல உள்ளதுடன், பல புதிய செய்திகளையும் கூறியுள்ளது. அச்செய்திகள் எட்டுத்தொகைப் பாடல்களின் தன்மையிலிருந்து மாறுபட்டு அமைந்துள்ளன. அதாவது, இக்குறிஞ்சிப்பாட்டானது எட்டுத்தொகைப் பாடல்களில் கூறப்பட்டுள்ள செய்திகளைச் சற்று விவரித்துக் கூறுகிறது.எட்டுத்தொகைப் பாடல்களில் கூறப்படாத புதிய செய்திகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.அவற்றில் குறிப்பிடத்தக்கன,

- தோழி பற்றிய அறிமுகம்.
- தலைவன், தலைவியின் காதல் பற்றி 'வெளிப்படையாக' கூறுதல். மற்றும் நீண்ட விவரிப்புகள்.
- நிகழ்வுகளை ஒன்றன்பின் ஒன்றாகக் காட்சிப்படுத்துதல்.
- குறிஞ்சிநில வருணனையை முல்லை நிலத்தின் பின்புலத்தில் இருந்து வருணித்தல் என்பனவாகும்.

**சான்றெண்விளக்கம்**


1. ராமமூர்த்தி. எல்., தமிழ் இலக்கியங்கள் கட்டவிழ்ப்பும் கட்டமைப்பும், 2005 (முதற்பதிப்பு) , காவ்யா, கோடம்பாக்கம், சென்னை, பக்.24,25.
2. சந்திரன் ஆ.,பத்துப்பாட்டு அமைப்பு முறை ஓர் ஆய்வு (முனைவர்பட்ட ஆய்வேடு), 2012, திராவிடப் பல்கலைக்கழகம் , ப.217.
3. கார்த்திகேசு சிவத்தம்பி,தொல்காப்பியமும் கவிதையியலும், 2007, குமரன் புத்தக இல்லம், 2007, பக்.23-24.
4. மேலது, ப.24